13ஆவது வருடத்தில்....

# விளம்பரம்

VLAMBARAM™

☎ 416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

5வது இதழ் வெளிவருகின்றது

உலகத் தமிழோசை

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)


HOMELIFE HIGHER STANDARDS

Direct: 416.315-9397

OFFICE: 416.321-6969

Sales Agents Welcome

நதி 13 AUGUST 15, 2003 பாலம் 16




## அருள்விருந்து

* அண்டம் அனைத்தும் ஈசனுடைய உடல், ஆதலால் அதில் ஒவ்வொருபதியும் புனிதம் நிறைந்தது.

* பிறர்மீது குறை கூறுவது யாருக்கும் பொருந்தாது. மற்றும் பிறரிடம் குணம் காண்பவன் தானே குணசீலன் ஆகிறான்.

* கடலை ஆழம் பார்க்கலாம். சான்றோர் உள்ளமோ கடலினும் ஆழமானது ஆயினும் அதில் அளப்பரிய எளிமையே நிறைந்துள்ளது.

* கடவுளைத் தேடித் திரியாதே. கடவுள் நெஞ்சத்தினுள் இருப்பதை உணர்ந்து கொண்டிரு.

* நீர்க்குமிழி போன்றது இவ்வுலகம் என்று இதைப் பொருள் படுத்தாதவன் அருகில் ஜமன் வரமாட்டான்.

* உள்ளன்பு படைத்திருப்பவர்களே உண்மையில் உயிர் வாழ்கின்றனர். அன்பு இல்லாத வாழ்வு சாவு போன்றது.

* உலகம் பற்றுடையார் புழுப் போன்றவர்கள். பற்றற்றிருந்து பணிவிடை புரிகின்றவர்களே பெருமக்கள் ஆகின்றனர்.

* தூங்கிக் கொண்டிருந்த இந்தியத் தாய் இப்பொழுது விழிந்து எழுந்திருக்கிறாள். தனது முழு மகிமையுடன் அவளை மிளிரச் செய்வது நம் கடமை.

## அல்லல் தீர்க்கும் நல்லைக் கந்தன்

இறைவனது வடிவங்கள் பலவாயினும் இறைவன் ஒருவனே; இதனை "ஏகம் ஏக அத்விதீயம் பரமம்" என வேதம் கூறும். எனவே தெய்வ வழிபாடு செய்வோர் தெய்வ வேதம், மூர்த்தி பேதம் குறித்து மாறுபட்டு மலைக்காமல் நிலையான அன்புடன் ஏக பரம்பொருளை தியானித்து வழிபடவேண்டும். இருந்தும் அனேகர் தமது இஷ்ட தெய்வத்தையே பூஜித்து வழிபடுகின்றர். முருகனை நினைந்து உருக நிற்போர் தொகை பெருகிக் காணப்படுதற்கு அவனது அருமையும் பெருமையுமே கராணமாகும். கந்தன் காந்தக் கடவுள். இதனால் கந்தனை பந்தமுடன் சிந்தனை செய்து வந்தனை புரிவோர் தொகை அளவுக்கு அதிகமாகவே காணப்படுகிறது.

*"சுடரே சிவபெருமான் சூடு பராசக்தி*
*திடமார் கணநாதன் செம்மை - படரொளியோ*
*கந்த வேளாகும் கருதுங்களில் சற்றேனும்*
*வந்ததே பேதவழக்கு"*

கந்தன் பேரொளிப் பிழம்பானவன். சிவனது நெற்றிகண்ணினின்றும் நிலமிசை வந்தவன் நெடுவேற்குமரன். எனவே அவன் செவ்வேள். அவன் திருக்கரத்து வேல் சுடர்வேல். ஆறு திருமுகத்தின் அருள் ஒளியும், வள்ளி தெய்வானை சக்திகளிடம் தேசகம் வேலின் ஞான ஒளியும் ஒரு சேர பெருவிருப்புடன் எம்மை முருகன் அருகில் சென்று உருகி நிற்கச் செய்கின்றன.

உலகம் உய்ய உருப்பெற்றவன் உமைபாலன் என்பது கச்சியப்பர் கூற்று. முழு மதியண்ண ஆறுமுகங்களின் அழகும் முன்நான்காகும் விழிகளின் அருளும் எம்மை அழுது அரற்றி தொழுதிடவைக்கும். அவன் உயிர்களுக்கு உறு துணையானவன். சார்ந்துணையும் சரவணனைச் சார்ந் திருப்பவர்கள் சிந்தாகுலம் நீங்கி வந்த பிறவிப்பிணி நீங்கி அந்தமில் இனபத்துள் திளைத்து கந்தன் கழலினை அடைவர்.

*"அருவமும் உருவுமாகி அனாதியாய் பலவாய் ஒன்றாய்*
*பிரமமாய் நின்ற சோதி பிழம்ப தோர் மேனியாகி*
*கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே*
*ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய".*

முருகு என்றால் அழகு, இனிமை, இளமை, மணம், கவர்ச்சி எனப் பலபொருள்படும். அழியா அழகு முருகனுடையது. இளமை நலம் மாறாத ஏந்தல் அவன். எனவே அழகு உணர்ச்சியும் இளமை நயப்பும் இருக்கும்வரை இவ்வுலகில் முருக வழிபாடு இருக்கவே செய்யும். போகானுபவனாகக் காட்சி தரும் முருகன் யோகானுபவனாகவும் காட்சி தருகின்றான். அவன் குழந்தைச்சாமி. அத்துடன் தகப்பன் சாமியாகவும் விளங்குகின்றான். (தொடர்ச்சி 9 ஆம் பக்கம்)

Since 1987

வசந்தா நகை மாளிகை

வசந்தன் - பத்மநாதன்
பத்தர்களின் கைவண்ணத்தில்
தங்கத்தின் புதிய வடிவங்கள்!

TEL: 905 848 5151
FAX: 905 848 8502
OPEN 10:30AM - 8:30PM
MONDAY CLOSED

3025 HURONTARIO ST., UNIT. 103A, MISSISSAUGA

Singapore Communication
Since 1991
Only $25
50 + 50 Bonus Anytime Evenings & Weekends
First Monthly Fee (a $25 Value)
+ Save Extra $100 Off Handset
Hurry Offer Ends Soon
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை
ஆகிய இடங்களுக்கும்
கடுகதியில் பணம்
அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்


Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.

Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto
• Home
• R.R.S.P
• Life
• Disability
• Mutual Fund
• Group Insurance
• Child Education
• Travel & Business.
416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
9.00A.M - 9.00P.M
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்



# செய்யும் தொழிலில், வெற்றி பெற



வியாபாரம் வெற்றிகரமாக நடக்க வேண்டுமானால் போதுமான அளவு நிதி அந்த வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு தேவைப்படும் பணம் முழுவதையும் உரிமையாளரே போடுவது என்பது பல சந்தர்ப்பங்களில் இயலாத காரியமாக உள்ளது.

அத்தகைய சந்தர்ப்பத்தில் தனியாரிடம் அதிக வட்டிக்குச் சிலபேர் கடன் வாங்குகிறார்கள். இன்னும் பலபேர் வங்கிகளிடமிருந்து கடன் பெறுகிறார்கள். தனியாரிடமிருந்து பெறப்படும் கடன்களை விட வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்களுக்கு வட்டி குறைவாக இருக்கும்.

இக்கட்டுரைத் தொடரில், இன்று வங்கிகள் மூலமாகப் பெறப்படும் கனடிய அரசின், கனடா சிறு வியாபார நிதிக்கடன்களைப் (Canada Small Business Financing Loan - CSBFL) பற்றிப் பார்ப்போம். இக் கடன்களை உங்கள் வங்கியின் மூலமாகவே பெறலாம். இக் கடன்களை கடன் ஒன்றியம் (Credit Union) மற்றும் காப்புறுதி நிறுவனங்கள் (Insurance Companies) மூலமாகவும் பெறலாம்.

சிறு தொழில் செய்வோர்- அவர்களுடைய எதிர்பார்க்கப்படும் வருவாய் 5 மில்லியனைத் தாண்டாதிருக்குமாயின் - கடன் பெறத் தகுதியுடையோர் ஆகிறார்கள். கனடாவில் இயங்கும் எத்தகைய சிறுதொழில்களும், (கடைகள் உட்பட) இத்திட்டத்தின் கீழ் கடன் பெறமுடியும். தொழில் புதிதாகத் தொடங்கப்பட்டதாகவும் இருக்கலாம். பல காலமாக இயங்கி வருவதாகவும் இருக்கலாம். தனிநபர், முதலாளியிலிருந்து, கூட்டாளிகள் மற்றும் கம்பனி முறையில் இயங்கும் சிறு தொழில்வரை எத்தகைய அமைப்பும் இத்திட்டத்தன் கீழ் கடன் பெறலாம். விவசாய, மதசம்பந்தமான, தர்ம ஸ்தாபன நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் கடன் பெற முடியாது.

**பெரி. முத்துராமன்**

இத்திட்டத்தின் கீழ் கடன்பெற, கடன்பெற விரும்புவோர், இத்திட்டத்தில் பங்குபெறும் நிதி நிறுவனங்களிடம் கடன்கோரி விண்ணப்பிக்க வேண்டும். நிதி நிறுவனங்கள், தகுந்த ஆய்வுக்குப்பிறகு கடன் வழங்குவது பற்றி முடிவு எடுக்கும். அத்தகைய ஆய்வுக்குப் பின்னர் கடன் வழங்க நிதி நிறுவனம் முடிவு எடுக்குமாயின், அத்தகைய கடன்களுக்கு கனடிய அரசு 85% வரை பொறுப்புறுதி (Guarantee) வழங்குகிறது. அதாவது கடனாளர் கட்டத் தவறும் பட்சத்தில் கனடிய அரசு நிதி நிறுவனத்துக்கு 85% வரை கடனாளி கட்டத் தவறிய தொகையைத் திருப்பிக் கொடுக்கின்றது. மீதமுள்ள 15% நட்டத்தை நிதிநிறுவனம் ஏற்கின்றது. கனடிய அரசின் பொறுப்புறுதி இல்லாத கடன்களில் 100% நட்டத்தையும் நிதி நிறுவனமே ஏற்கிறது என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

எத்தகைய காரியங்களுக்கு இந்த கடன்களைப் பயன்படுத்தலாம் என்று பார்ப்போம்.

* வியாபாரத்திற்கான கட்டிடம், இயந்திரங்கள், அசையா சொத்துக்கள் போன்றவற்றை வாங்கலாம். கட்டிடம் புதிதாகவோ, பழைய தாகவோ இருக்கலாம்.

*வியாபாரத்தற்குத் தேவையான உப கரணங்களையும் வாங்கலாம்.

கீழ்காணும் காரியங்களுக்கு இந்தக் கடனைப் பயன்படுத்த முடியாது.
* மூலதனப் பங்குகளைப் பெற.
* வியாபாரத்திற்க்குத் தேவைப்படும் அன்றாட மூலப் பொருட்களை வாங்க.
* முந்தைய கடன்களைத் திருப்பிக் கொடுக்க.
* கட்டிடங்களை விற்பனைக்கு என்றே வாங்க.

இத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் கடன் தொகை: கட்டிடம் அல்லது உபகரணங்களின் மதிப்பில் 90 சதவீதம் வரை. அதிகபட்சத் தொகை $250,000. வட்டி நியாமானதாக இருக்கும். கடன் பெறுபவர் மாறும் வட்டியாகவோ (Floating Rate Loans) நிரந்தர வட்டியாகவோ (Fixed Rate Loan) கடனைத் தேர்ந்தெடுக்கலாம்.

கடனில் பெறப்படும் சொத்தே, கடனுக்கு பெறுமதியாக (Security) இருக்கும். தனி நபர் பெறுமதியை (Personal Guarantee) 25% வரை நிதிநிறுவனம் பெற்றுக்கொள்ளலாம். தனியாரின் சொத்துக்களைப் பெறுமதியாக நிதி நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் கேட்காது. கடனை பத்தாண்டு காலத்திற்குள் ஆண்டுத் தவணையாகவோ, மாதத் தவணையாகவோ திருப்பிக் கட்டலாம்.

உங்களுக்குத் திறமையும் தகுதியும் இருந்தால் கனடிய அரசின் இக்கடன்களை உங்கள் நிதி நிறுவனத்தின் மூலமாக நீங்களும் பெறலாம்.

உங்கள் தொழிலில் நீங்கள் வெற்றி பெற்றவரா? உங்கள் வெற்றி மேலும் பலருக்கு முன் உதாரணமாக அமையலாம். உங்கள் வெற்றிச் செய்தியைக் கேட்க நாங்கள் விரும்புகிறோம். சொல்ல நீங்கள் தயாரா?

அப்படியானால் இக் கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் தொழிலில் உங்கள் நேரத்தையும் பொருளையும் சேமிக்க, இலாபத்தை அதிகரிக்க, ஆலோசனைகளுக்கும், மறு ஆலோசனைகளுக்கும் திரு. பெரி. முத்துராமனுடன் தொடர்பு கொள்ளுங்கள். இவருடைய Success Biz Solution நிறுவனத்தின் வாயிலாக பல தொழில் முனைவர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். நீங்களும், இன்றே பயன் அடைய இப்போதே 416 430 0623 அல்லது (C) 416 278 2026 இல் தொடர்புகொள்ளுங்கள்.

பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பெற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu Businesslime மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

## ரவி நடராஜா

**Accident & Traffic Ticket**


(14 Years Insurance Claims Experience)



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்

மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON



## யோகா சோதிடம்

* கிரகப் பொருத்தம் பார்த்தல்
* சுபமுகூர்த்தம் கணித்தல்
* பலன் பார்த்தல்
* சாதகக் குறிப்புக் கணித்தல்

**416-299-8361**

# SAFETY TRUCKS
## Training School Ltd.

**Training & Trucking** **Classes A, D & Z**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (9ஆம் ஆண்டு)

**We Accept Welfare & Unemployment Insurance**

வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




**In Classes**
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**16 Years Canadian Experience with Trucks**

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON

# APPLEMORE AUTOMOTIVE

**உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்**

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing
* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**
**435 Midwest Road. Unit B5,**
**Scarborough, ON. M1P 3A6**





### கனடா- மாதகல் நலன்புரிச் சங்கம்

வருடாந்த ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும் - 2003

காலம்:- ஆகஸ்ட் 24, 2003 ஞாயிற்றுக்கிழமை. ஆரம்பம்: காலை 9.00 மணி
இடம் :- MIliken Park Area C (Steeles & McCowan )
நிகழ்ச்சி நிரல்: விளையாட்டுப்போட்டி விருந்துபசாரம் B.B.Q
அதிட்டலாபச் சீட்டிழுப்பு பரிசளிப்பு வைபவம்
பாடசாலையில் 2002-2003 கல்வியாண்டில் விருதுபெற்ற மாணவரைத் தெரிவுசெய்தல்.
(தகுதியானோர் ஆகஸ்ட் மாதம் 25ஆம் நாளிற்கு முன்னதாகத் தொடர்பு கொள்ளவும்)
நடப்பாண்டுச் செயலவை உறுப்பினரை அங்கத்தவரிடையே தெரிவுசெய்தல்
தொடர்புகட்கு: (416-269-7435) (905-479-5375) (416-609-0355)

### சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழையமாணவர், ஆசிரியர் சங்கத்தின் கனடா 5ஆம் ஆண்டு ஒன்றுகூடல், புதியநிர்வாகசபைத்தெரிவும்.

August 16th, 2003 (ஒகஸ்ட் 16ஆம் திகதி,2003) சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி பழைய மாணவர், ஆசிரியர் சங்கத்தின் கோடைகால ஒன்றுகூடல் வருகிற ஒகஸ்ட் மாதம் 16ஆம் திகதி (Aug. 16. 2003) சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 6மணிவரை மோனிங்சைட் பூங்காவில் பகுதிகள் 3இலும் 4இலும் (Mornighside Park - Unites 3&4) வழமைபோல் நடைபெறும்.

16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளும் மற்றும் பல நிகழ்ச்சிகளும் இடம்பெறும். புதிய நிர்வாக சபைத்தெரிவு பகல் 12 மணிக்கும் 1மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம் பெறும். சகல பழைய மாணவர், ஆசிரியர்கள் தத்தம் குடும்பத்துடன் வருகை தந்து ஒன்று கூடலை சிறப்பித்து, காலை பாபிக்கு (B.B.Q) மதிய போசன உணவிலும், மாலை சிற்றுண்டியிலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
வருகை தருபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள்

1. நல்லையா ரவீந்திரன் 416-754-2195
2. ரேஜி தவரத்தினம் 416-446-2965
3. குணம் கன்ட் 905-472-0379
4. சந்திரன் கார்த்திகேசு 416-291-1919

### கிருஷ்ண ஜென்மாஷ்டமி

காலம்: புதன்கிழமை, ஆகஸ்ட் 20ஆம்திகதி 2003, மாலை 6.00மணி
இடம்: ஹரே கிருஷ்ண ஆலயம் (Iskcon) (ஶ்ரீ ஶ்ரீ ராதா கோபிநாத்)
243, Avenue Road, M5R 2J6
நிகழ்ச்சிகள்: * ஞாயிறு பாடசாலை மாணவர்களின் நாடகம்.
* பரத நாட்டியம், * நாடகம், * பஜனையும், கீர்த்தனையும். * அபிஷேகம். * நள்ளிரவு ஆரத்தி. * சுவையான பிரசாதம்.
ஸ்தாபகர்:- அருட்திரு A.C பக்திவேதாந்த சுவாமி பிரிபுபாதா.
மேலதிக விபரங்கட்டு: 416-922-5415

### பாலர் ஞானோதயா சங்கம்- கனடா

கட்டுவன், மயிலிட்டி தெற்கு மக்களின் ஒன்று கூடலும் விளையாட்டு நிகழ்ச்சிகளும் August 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை McCowan /Steeles இல் அமைந்துள்ள Milliken park - Area "a" இல் நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியில் சகல மக்களையும், நண்பர்களையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம். நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு, உங்கள் ஆதரவையும், கருத்துக்களையும் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

தொடர்புகளிற்கு: பாலரமணி 416-289-3255 இராஜரட்ணம் 416-412-1164

### நட்சத்திர இரவு 2003

இளைஞர்களது எதிர்காலம் ஒளிமயமாக இருக்க வேண்டி, இளைஞர்கள் சக்தியை ஒருமுகப்படுத்தி நற்பணிகளில் ஈடுபடுத்தும், இலக்குடன் நடாத்தப்படும் மெல்லிசைக்கலை நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஒகஸ்ட் 22, 2003 மாலை 6.30மணி அளவில் பேர்டன் சபாமண்டம் ஜோக் பல்கலைக்கழகம், 4700 Keel St, Toronto வில் நடைபெறும்.

திரண்டுவாரீர் எம் இளைஞரை ஆதரிப்பீர்!

### அருள்மிகு கனடா கந்தசாமி கோவிலில் அகண்டநாம நவக்கிரக ஹோமம்

733 Birchmount Road இல் அமைந்துள்ள அருள் மிகு கனடா கந்தசுவாமி கோவிலில் (14-08-2003) வியாழக்கிழமை மேட இராசிக்கு ராகுவும், துலாராசிக்கு கேதுவும் இடமாற்றத்தை ஒட்டி 17-08-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் இரவு 8 மணிவரை அகண்டநாம நவக்கிரகஹோமம் நடைபெறவுள்ளது. நவக்கிரகஹோமத்தில் சற்பசாந்தி செய்வோர்களும், செவ்வாய் குற்றமுடையவர்களும், குரு பலன் இல்லாதவர்களும், ஏழரைச்சனி, அட்டமத்துச்சனி, இராகு, கேது தோஷம் உள்ளவர்களும் பங்குபற்றி நவக்கிரக தோசங்கள் நீங்கி சுகவாழ்வு வாழ்வீர்களாக. தொடர்புகட்கு: 416-438-1882
பக்தியுடன் அறங்காவல் சபையினர்.

### 25வது ஆண்டு ஞாபகார்த்த நூல் வெளியீடு

இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரும், மக்கள் நேசனுமாகிய "காத்தி" என்று சக கம்யூனிஸ்ட் தோழர்கள், சக ஆசிரியர்களால் அன்புடனும், "காத்தார்" என்று மாணவர்களால் செல்லமாகவும் அழைக்கப்பட்டு இன்றும் அனைவர் மனதிலும் நிறைந்திருக்கும்.

மறைந்த தோழர் மு. கார்த்திகேசன் அவர்களின் ஞாபகார்த்த நூல் வெளியீடு.
ஆகஸ்ட் 24ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை, மாலை 5.30 மணியளவில் ஸ்காபரோ சிவிக் சென்ரரில் நடைபெறும்.

இந் நிகழ்ச்சியில் அன்னாரின் தோழர்கள், உறவினர்கள், அயலவர்கள், பத்திரிகையாளர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகட்கு : ஜானகி 416-490-0276 சு. மார்க் 416-724-6169

### T.S.S.A கனடா நடாத்திய ஒருநாள் விளையாட்டு விழா

கனடாவிலுள்ள தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஒன்பதாவது வருடாந்த விளையாட்டுவிழா இம்மாதம் சனிக்கிழமை 09ஆம் திகதி Sir John McDonald Collegiate Institute மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம விருந்தினர் திரு. S. சோதிராஜா (Ex. Senior Program Co- cordinator Reddbarna, Sri lanka) பெண்கள், ஆண்கள் அணிநடையுடன் விழாவை ஆரம்பித்து வைத்தார். சிறப்புவிருந்தனராக திரு. M. முத்துலிங்கம் (முன்னாள் அதிபர்) முத்துதம்பி மகாவித்தியாலயம்) கலந்து கொண்டார்.

| போட்டிமுடிவுகள் | முதலாம்இடம் | இரண்டாம்இடம் | மூன்றாம்இடம் |
|---|---|---|---|
| அணிநடை பெண்கள் | கொக்குவில் இந்துக்கல்லூரி | உடுவில் மகளிர்கல்லூரி | ஸ்ரான்லி கல்லூரி |
| ஆண்கள் | உரும்பிராய் இந்துக்கல்லூரி | கொக்குவில் இந்துக்கல்லூரி | - |
| துடுப்பாட்டம் | உரும்பிராய் இந்துக்கல்லூரி | புனித அரசர் கல்லூரி | மானிப்பாய் இ.கல்லூரி |
| | | | புனித சம்பத்தரிசியர் கல்லூரி |
| கரப்பந்தாட்டாம் | புத்தூர் ஶ்ரீ சோமஸ்கந்தா | குப்பிளான் விக்னேஸ்வரா | புனித அந்தோனியர் |
| வலைப்பந்தாட்டம் | சுண்டிக்குளி மகளிர் | வேம்படிமகளிர் | யாழ். இந்து மகளிர் |
| உதைபந்தாட்டம்- 15 வயதின்கீழ் | கொக்குவில் இந்துக் கல்லூரி | ராமகிருஷ்ணாவித்தியாலயம் | புனித சம்பத்தரிசியர் |
| உதைபந்தாட்டம் | வல்வை சிதம்பராக் கல்லூரி A | வல்வை சிதம்பராக் கல்லூரி B | ஹாட்லிக்கல்லூரி |

பிரதம விருந்தினரும், பாரியரும், சிறப்புவிருந்தினர், மத்தியஸ்தர்கள், திரு. S. R. Rajathurai (frutiello, பத்திரிகையாளர்கள், CTBC, TVI, இம் மைதானத்தை ஒழுங்கு செய்வதற்கு உதவிய திருவாளர் S. கணேஸ் (Soccer Referee's Association) அவர்களுக்கும், பழைய மாணவர்கள் ஒத்துழைப்புக்கும், இறுதியாக சகல பார்வையாளர்களும் வருகை தந்து இவ்விழாவை சிறப்பித்தமைக்கும், T.S.S.A நிர்வாகசபை தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**



# அன்புத் தமிழ்

## சிறுகதை வளர்ச்சி ஒரு கண்ணோட்டம்

*சென்ற இதழ் தொடர்ச்சி...*

சிறுகதை எழுதுங் கலை பற்றி வெளிவந்த முதற் புத்தகம் அமெரிக்க விமர்சகர் பிரண்டர் மத்தியுஸ் எழுதிய The Philosophy of the short-story (1901) என்பது. இந்நூல் போவின் கருத்துக்கள் பலவற்றைக் கொண்டிருந்து. போ விமரிசனம் செய்த காலங்களில் சிறுகதைகள் கிராமியக் கலைகளின் வாசனையை அதிகம் கொண்டிருந்தன. அதாவது, சிக்கலான சம்பவங்கள், அதீத கற்பனை, இயற்கைக்கு மாறான சம்பவங்கள் என்பன சிறுகதைகளில் மிகுந்திருந்தன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்நூற்றாண்டு ஆரம்ப காலத்திலும் சிறுகதைகளின் போக்கில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

சிறுகதையில் பல வகையான இலக்கிய உத்திமுறைகளை எழுத்தாளர் வளர்த்தெடுத்தனர். அவற்றுள் ஆச்சரிய முடிவு, குறிப்புப் பொருள் ஆகிய இரண்டும் பிரபல்யமானவை. சிறுகதைகளை எதிர்பாரத திருப்பம் ஒன்றுடன் முடித்துப் படிப்பவரை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கும் உத்திமுறையைப் பெருமளவிற் கையாண்டவர் அமெரிக்கச் சிறுகதை எழுத்தாளர் ஓ கென்றி என்பவர்.

குறிப்புப் பொருள் உத்திமுறையை (Epiphany) வளர்த்தெடுத்தவர் அயர்லாந்து எழுத்தாளர் ஜேம்ஸ் ஜோயிஸ் என்பவர். கதையின் சிக்கல்களை விடுவிக்கத் தக்க அல்லது அவற்றின் அர்த்தங்களை விளங்கிக் கொள்ளத் தக்க பொருள்களை மறைமுகமாக அல்லது குறியீடாகச் சொல்வது இவரது வழக்கம். இவரது Dubliners (1914) என்ற சிறுகதைத் தொகுதி இதற்கு நல்ல உதாரணம்.

இவ்வித கற்பனைகள், திருப்பங்கள், ஆச்சரியங்கள், மறைபொருள்கள் என்று எதுவுமே இல்லாமல் கதைகள் எழுத முடியாதா? எழுதலாம் என்று காட்டியவர் இரஷ்ய ,எழுத்தாளர் அன்ரன் செக்கோல். அவரது சிறுகதைப் பாணி சாதாரண வாழ்க்கைச் சம்பவங்களையும் யதார்த்தப் போக்கினையும் கொண்டிருந்தது. இந்த முறையைப் பல எழுத்தாளர்கள் கையாளத் தொடங்கினர். அவர்களில் கை டி மாப்பசான் (பிரான்ஸ்), கென்றி ஜேம்ஸ் (அமெரிக்கா), ஜோசெப் கொன்ராட் (இங்கிலாந்து) என்போர் பிரபல்யமானவர்கள்.

## கவிஞர் வி. கந்தவனம்

ஆக, தேவதைகளும், இராசா இராசாத்திகளும் முக்கிய பங்கு வகித்த கதைகள் காலப்போக்கில் மனிதர்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் கதைகளாக மாறலாயின. நடைபெறமுடியாத கற்பனைகளுக்கு பதிலாக நடைமுறைப் பிரச்சனைகள் கதைகளில் இடம்பெறலாயின. சிக்கலான சம்பவங்களுக்குப் பதிலாக நடைமுறைப் பிரச்சனைகள் கதைகளில் இடம்பெறலாயின. சிக்கலான சம்பவங் களிற்குப் பதிலாக எளிமையான சம்பவங் களை எழுத்தாளர் தெரிவு செய்யத் தொடங்கினர்.

தொடர்ச்சி 19ஆம் பக்கம்


**கலைமகள் புத்தக நிலையம்**

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

**594 PARLIAMENT ST. , TORONTO**
**(416) 921-5018**


**WINDOW COVERING**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

BLINDS
DRAPERIES AND SHUTTERS
• Venetian Blinds
• Vertical Blinds
• Roller Shades
• Pleated Shades
• Cellular Shades

FREE ESTIMATE

இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.




5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

விபரங்களுக்கு: என். செல்வம்
416.332.8482 /416.419.9247 / 905.201.7733


**Singh Electronics 110-220v**


220v Tube Light
$24.99
reg.$34.99


Vista 350
$49.99
reg.$79.99



Samsung R225 World Mobile
$279.99


$99.99
220v CD



Hitachi Multi-system VCR
reg.$249.99
$199.99


220v Flash Light
$9.99


GSM Motorola STARTAC
$149.99
reg.$249.99


220v Microwave
$149.99


220v Irons
$19.99+
reg.$29.99


DVD player Multi-system
$159.99

**Mohinder/Harman**
1770 Albion Rd. Unit # 6
Rexdale, On.
(Hwy. 27 and Albion)
(416) 745-1021



**Panminder**
105 Kennedy Rd. S
Brampton, On.
(Kennedy Rd. and Dean St.)
(905) 874-1694

## சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து!



### ராஜ தந்திரம்

பஞ்ச தந்திரக் கதைகளிலும், பாரதப் போரிலும் தந்திரங்கள், ராஜ தந்திரங்களால் தாம் அடைய விரும்பியதை எவ்வாறு அடைந்தார்கள் என்பதனை சென்ற இதழில் பார்த்தோம். மன்னர்கள் ஆண்ட காலத்தில் இருந்து இன்று மக்கள் ஆட்சி நடைபெறுகின்ற காலம்வரை ஆட்சியை பிடிப்பதற்கும், ஆட்சியை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கும் பலரும் தந்திரங் களையும், ராஜ தந்திரங்களையும் கையாள்வார்கள். பொது நலம் என்ற பெயரில் நடைபெறும் சுயநல அரசியல் என்ற சாக்கடையில் தந்திரங்களும், ராஜ தந்திரங்களும் தினமும் நடைபெறுவதைக் காண்கின்றோம். உண்மை என்ற சொல்லுக்கு அரசியலில் அர்த்தமே இல்லை எனலாம். சொல்லுவதொன்றாக செய்வ தொன்று இருப்பதற்கு காரணமே அரசியல் வாதிகளின் தந்திரங்களும், ராஜதந்திரங் களுமேயாகும்.

கனடிய அரசாங்கத்திலும், மாகாண அரசாங்கங்களிலும் உள்ள கட்சிகளில் புதிய தலைவர்களை தெரிவு செய்வதற்கான, ஒன்று கூடல்கள் நடப்பதுவும், புதிய தலைவர்கள் தெரிவு செய்யப்படுவதையும் நாம் பார்க்கின்றோம். தலைவர் போட்டிக்கு பலர் போட்டியிடுவார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பின்னால் கட்சி அங்கத்தவர்கள் என்ற பெயரில் பலர் ஆதரவுக்கரம் கொடுப்பார்கள். போட்டியில் முதல் சுற்றில் தோற்றவர்கள், மற்றைய சுற்றில் முன்னனியில் நிற்பவர்களுக்கு தமது ஆதரவை கொடுத்து ஒரு தலைவரை தெரிவு செய்வார்கள். கட்சி அங்கத்தவர்கள் என்ற பெயரில் தலைவரை தெரிவு செய்ய பாடுபட்டு உழைத்தவர்களும், போட்டி இட்டவர்களும் போட்டியில் வென்றவர்களும் அதில் முழு மூச்சாக ஆதரவை கொடுப் பதற்கும் ஈடுபடுவதற்கும் காரணமே, தாம் போட்டியில் ஆதரிப்பவர் பதவிக்கு வந்தால் தமது சுயநலத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம். அதாவது தலைமையின் கீழ் பணம் பண்ணலாம் என்ற நப்பாசையே ஆகும். அது பற்றி அவர்களிடம் கேட்டால் எமது நாட்டு மக்களுக்கு நல்ல ஒரு தலைவரை தெரிவுசெய்வதே நோக்கம் என்பார்கள. இது தனிப்பட்ட மனிதர்களின் தந்திரங்கள், ராஜதந்திரங்களுக்குள் அடங்குகின்றது.

இன்றைய காலகட்டத்தில் வெள்ளை இனத்தவர்களை பெரும்பான்மையினராகக் கொண்ட ஐரோப்பிய நாடுகளில், வேற்று இனமக்களை, மற்றைய நாடுகளில் இருந்து பலகாரணங்களுக்காக, (உதாரணத்திற்கு அரசியல் அகதிகளாக) வருபவர்களை தமது நாடுகளில் குடி அமர வைப்பதை பார்க்கும்போது மனிதநேயம் காரணமாகத் தான் அகதிகளுக்கு ஆதரவு கொடுக்கின்றார் கள் என்பது போல எண்ணத் தோன்றினாலும், உண்மையை ஆராய்ந்தால் பல்லின மக்களும் சேர்ந்து வாழும் நாடுகளாகிய அமெரிக்க, கனடா போன்ற நாடுகள் பல இனமக்களையும் முன்னிறுத்தி அவர்களின் பூர்வீக நாடுகளில் வியாபாரம் செய்யவும் அதனால் ஆதாயம் அடைவதையும் பார்த்து அதே வழியில் தமது நாடுகளும் வியாபார வெற்றி பெறுவதும் நோக்கமுமே அகதி களுக்கு புகலிடம் கொடுப்பது ஐரோப்பிய நாட்டவர்களின் மனிதநேய செயல்மட்டும் அல்ல என்பதும் விளங்கும்.

ஈராக் போரின் போது அமெரிக்க அதிபர், பாதுகாப்பு அமைச்சர், போர்த்தளபதிகள் போன்ற பெரும்பான்மை தலைவர்கள் வெள்ளை இனத்தவர்களாக இருந்த போதும், போர் விடயங்களைபற்றி மற்றைய நாடுகளின் தலைவர்களுடன் கலந்து பேசவும், போர்கால நிகழ்வுகளை உலகத்திற்கு தெரியப்படுத்தும் அறிவுப்பு களை கட்டார் நாட்டில் போர் மையத்தில் இருந்து தெரிவித்தவர்கள் யார் என்று பார்த்தீர்களேயானால் கறுப்பு இனத்தவர் களான Colin Powel, Vince Brook போன்றவர் களையே யாவார்கள். உல கத்திற்கு வெள்ளை இனத்தின்மீது வெறுப்புண்டாகா தவாறு பார்த்துக் கொண்ட அமெரிக்க ராஜதந்திரம் அதுவாகும்.



சௌநாயக்காவிடம் இருந்து இலங்கையின் அரசைக் கைப்பற்ற பண்டாரநாயக்கா செய்ததும் இனத்துவேச வளர்ப்பு என்ற ராஜதந்திரம்தான். ஈராக் விமானத்தளத்தை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிய பின்பும் சதாமின் ராஜாங்க அமைச்சர் ஈராக் மக்களை நம்பும்படியாக முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைத்த கதையாக அமெரிக்க படைகள் பாக்தாத்துக்குள் வரமுடியாமல் இருப்பதாக பொய் சொன்னதும் ராஜதந்திரம் தான். இலங்கையிலும், ஈராக்கிலும், அந்த ராஜதந்திரங்கள் செய்த உயிர்ப்பலிகள் பற்றி உலகம் அறியும்.

இவ்வாறு எம்போன்ற சாதாரண மனிதர்களை நாம் விரும்பியோ, விரும்பாமலோ தந்திரங் கள், ராஜ தந்திரங்கள் ஆளுகின்றன.

சிந்தனை தொடரும்

பரம் G.
ஒரு சாதாரணமனிதன்


**COLOMBO PHOTO STUDIO**

WEDDING,
BIRTHDAY,
ARANKETTAM,
BABY PHOTO,
FAMILY PORTRAIT,
PASSPORT, CITIZEN,
PUBERTY CEREMONY,
P.R CARD, ID PHOTO
ETC.......

416 752 4444



FREE FREE FREE
2 - 5 x 7 Studio Portrait
Enlargement Free
(Couple or Family)
With Purchase of any
Passport, Citizen,
Permanent Resident Card,
ID Photo

Digital Special Effect
From $25.00

DIGITAL VIDEO TRANSFER

CEDARFACE PLAZA
2298 Eglinton Ave. East
Unit #6, Lower Level (Basement)
SCARBOROUGH

**LARGE INDOOR PUBLIC CAR AUCTION**

*EVERY WEDNESDAY EVENING*
*STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM*

**100+ VEHICLES ON DISPLAY INDOORS**

INCLUDE MANY LATE MODEL
> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
>V.W., & OTHER FOREIGN
& DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

**WEEKLY CASH BUYERS DRAWS OPEN**
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM
**FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM**

1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ONTARIO.

**CIA PUBLIC AUTO AUCTION & SALES**
**416 - 242 - 5052**
www.cialeasing.com



வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜீ
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

**Param Gnana**
Sales Representative
HomeLive GTA
Reality Inc.

thémathuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)





# நாமும் நமது இல்லமும் 170

**அடமானக் காப்புறுதி குறைகின்றது!**

கனடாவில் வீடுவாங்குபவர்களின் நலன்கருதி 1954ஆம் ஆண்டிலிருந்து உதவி செய்துவரும் நிறுவனங்களின் பெயர்ப் பட்டியலில் ஒன்று CMHC. (Canada Mortgage Housing Corporation) இந்த நிறுவனம் எம்மில் பலருக்கு வீடு வாங்கு வதற்கு ஒருவகையில் துணை புரிகின்றது. இல்லம் வாங்கும் ஒருவரிற்கு 25% முதலீடு செய்து வீடு வாங்குவது இயலாத நிலையாக இருக்கும் போது, இந்நிறுவனம் கை கொடுக்க முன்வருகின்றது. இந் நிறுவனத்தின் நிலைப்பாடு என்ன என்றால் 25% இற்குக் குறைவாக முதலீடு செய்து வீடு வாங்குபவரிற்கு ஒரு காப்புறுதி செய்து அவர்கள் வீடு வாங்குவதனை இலகு வாக்கிக் கொள்கின்றது. கனடாவில் மூன்றில் ஒரு பகுதியினர் இந்தக்காப்புறுதி பெற்று வீடு வாங்குவதாகக் கூறப்படுகின்றது.

## ராஜா மகேந்திரன்

பொதுவாக வீடு வாங்குபவர்களின் ஆரம்ப முதலீடு வித்தியாசமாகக் காணப்படும். அதாவது, சிலர் 50% முதலீடு, 25% ,10,......, 5% என தமது வசதிக்கும் தேவைக்கும் ஏற்ற மாதிரி முதலீட்டை (DownPayment) செய்து வீடு வாங்கிக் கொள் வார்கள். ஒவ்வொருவரின் முதலீட்டிற்கு ஏற்ப இந்தக் காப்புறுதி அற விடப்படுகின்றது. கூடிய தொகையை முதலீடு செய்பவர்களிற்கு குறைந்த காப்புறுதியும், குறைந்த முதலீடு செய்பவர்களிற்கு கூடிய காப்புறுதியும் அற விடப்பட்டு வருகின்றது. உதாரணமாக சொல்வதானால் 5% முதலீடு செய்பவர்களிற்கு 3.75% காப்புறுதி அறவிடப்பட்டு வந்தது. இந்தக் காப்புறுதி ஒரு தடவை தான் அறவிடப்படும். திரு என்பவர் 5% முதலீட்டுடன் $100,000 இற்கு ஒரு கொண்டோ (Condo.) வாங்குவதாகக் கொண்டால் இவரின் காப்புறுதிப் பணம் $3562.50 (3.75% x 95,000) ஆகும். இந்த தொகையை பெறப்படும் அடமானத்துடன் (Mortgage உடன்) சேர்த்து கொள்ளலாம், அல்லது தனியாகக் கொடுப்பனவு செய்யலாம்.

* அறிந்திருக்க: இந்தக்காப்புறுதிக்கு $3,562 இற்கு மேலதிக PST (Provincial Sales Tax) செலுத்த வேண்டும். அதாவது 3,562 x 8% =$285.00). இவ்வாறு எமது ஆரம்ப முதலீட்டிற்கு ஏற்ப இந்த காப்புறுதியின் பெறுமதி மாறும். இதில் மேலதிக விடயம், ஒருவர் 25% முதலீடு செய்வதாக இருந்தால் அடமானம் கொடுக்கும் நிதி நிறுவனத்திற்கு எதுவித காப்புறுதியும் செலுத்த தேவையில்லை. பொதுவாக 25% முதலீடு செய்யும் போது 0% காப்புறுதியாக இருக்கும். இந்த அடமானக் காப்புறுதியினால் நம்மில் பலரிற்கு வீடு வாங்குவது இல்குவாக்கப் படுகின்றது. இதனால் ஒருவர் பொதுவாக 95% வரையான வீட்டின் பெறுமதிக்கு வீடு வாங்கக் கூடியதாக இருக்கும். இந்தக் காப்புறுதியின் பெறுமானம் காலத்திற்கு காலம், மாற்றப்பட்டு வருகின்றது. பொதுவாக CMHC, GE என்ற நிறுவனங்களே இந்தக் காப்புறுதியை செய்து வருகின்றது. பொதுவாக 25%இற்கு கூடுதலாக முதலீடு செய்தாலும் அடமானம் வழங்கும் நிதி நிறுவனங்கள் காப்றுதிப் பணம் பெறுவதில்லை. இதனால் 25% வரை முதலீட்டிற்கான புதிய, பழைய காப்புறுதி தொகை கீழே தரப்பட்டுள்ளது.

| முதலீட்டின் பெறுமதி | July14,2003இற்கு முன்பான காப்புறுதி | July14,2003இற்கு பின்னான காப்புறுதி |
|---|---|---|
| 5%முதல்9.99%வரை | 3.75% | 3.25% |
| 10%முதல்14.99%வரை | 2.50% | 2.00% |
| 15%முதல்19.99%வரை | 2.00% | 1.75% |
| 20%முதல்24.99%வரை | 1.25% | 1.00% |
| 25%முதல்மேலதிகமாக | 0% | 0% |

இந்த CMHC காப்புறுதி இறக்கத்தால் $100,000 பெறுமதியான அடமானம் பெறுபவரிற்கு பழைய காப்புறுதி (July 14, 2003 இற்கு முன்பு) $3750 + PST. புதிய காப்புறுதி (July 14,2003 இற்கு பின்பாக $3250 + PST. எனவே காப்புறுதியில் $500வரை சேமிக்ககூடியதாக உள்ளது.

### HOUSE FOR SALE

- MORNINGSIDE & FINCH
- 3 BEDROOM HOUSE FOR SALE
- 3 WASHROOM • 2 STOREY
- CLOSE TO SCHOOL, 24 HRS BUS, HWY 401, MALL, RESTAURANT. TEMPLES, CHURCH, MOSQUE. OVER 2500 SQFT.
- ASKING ONLY $328,000.

### HOUSE FOR SALE

- 3 BEDROOM + 3 BEDROOM (BSMT) APARTMENT. •KENNEDY - BRIMLEY
- SEP. ENTRANCE.
- 2 KITCHEN / 2 WASHROOM
- STEPS TO 24HRS TTC, SCHOOL, SUBWAY.
- ASKING PRICE ONLY $269,900 /B.O (VERY SERIOUS SELLER)

### CONDO FOR SALE

- MCCOWAN & SHEPPARD (4727 SHEPPARD)
- 2 Bedroom + DEN • 2 Washrooms
- Asking only $194,900 •1 Car parking

### CONDO FOR SALE

- EGLINTON & MCCOWAN (121 TRUDELLE)
- 3 Bedrooms • 2 Washrooms
- 5 Min. to Kennedy Subway.
- 5 Appliances Included.
- Asking only $164,900.00

### HOUSE FOR SALE

- THORNHILL
- BAYVIEW / GREENLANE
- 4 BEDROOM SEMI FOR SALE
- 3 WASHROOM • ASKING $294,900.

### TOWN HOUSE FOR SALE

- RICHMONDHILL - YOUNGE & 16TH AVE.
- 3 BEDROOM TOWN HOUSE FOR SALE
- 3 BEDROOM FINISHED BSMT.
- CLOSE TO HILLCREST MALL.
- ASKING ONLY $237,000. (DON'T MISS THIS)

**Raja M. Mahendran,** P. Eng.
Vice President/Sales Rep.
Office - Tel.: (416) 321-6969
Direct: (416) 315-9397
Email: raja@mahendran.ca

| Interest | Rate |
|---|---|
| 5YrsMortgage | 4.49% |
| Prime rate | 5% |
| Bank rate | 3.25% |



# CLEANING

• வீட்டு CARPET கழுவுதல் • CAR சம்போ Cleaning
அழையுங்கள் நேசன் - 416 - 332 - 1463
Cell - 416-716-0629


## pundit prithipal

astrologer

*Solutions for black magic, evil spirits, drinking problems, family related problems, money problems, love relationships, and much more!*

*Forecasting includes, palm readings, sun sign analysis, name readings, birthday readings, love and health, and money chances*

*CALL TODAY at 905-678-8932!*




Pundit Prithipal
26 Sledman St.
Malton, ON
L4T 1K5
tel: 905-678-8932
fax: 905-612-0906
cell: 416-219-7054
e-mail: pundit@punditprithipal.com
website: www.punditprithipal.com

Free Consultation! Call for help today - "I understand your Problems"


# MORTGAGES




Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below

LOW - LOW RATES AVAILABEL. TO GET BEST RATE IN TOWN PL. CALL: ANIL JOSHI

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply





For more information call:
**Anil Joshi** at
**416.888.1072**



# விண்வெளி 125

**கனி**

## நட்சத்திரங்கள்

*1928ஆம் ஆண்டு சுப்பிரமணியம் சந்திரசேகர் என்ற இளம் இந்தியப் பட்டதாரி மாணவன் இங்கிலாந்தின் Cambridge என்ற பல்கலைக்கழகத்தில், அக்காலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்த வானவியல் நிபுணர் Sir Arthur Eddington இடம் மாணவனாகப் படிப்பதற்காக கப்பலில் புறப்பட்டார். அல்பேட் அயனரைனின் சார்புத் தத்துவக் கொள்கைகளில் நிபுணரான இந்த எடிங்ரன், அயன்ரைன் சார்புக் கொள்கையை வெளியிட்டபோது அதை விளங்கிக் கொண்ட மூவரில் ஒருவர் எனக் கூறிக்கொள்வார்கள். (இன்னொருவர் சார்புக் கொள்கையைக் கூறிய அயன்ரையின் அந்த மூன்றாமவர் யார் என்பது ஒருவருக்குமே தெரியாது. ஒருவேளை எல்லாம் அறிந்த அந்நப் பரம்பொருள்தானோ அந்த மூன்றாமவர்...)*

கப்பலில் பயணம் செய்த சந்திரசேகரின் கவனத்தை இந்த இறந்த நட்சத்திரங்கள் என்ற White Dwarts ஈர்த்தன. சிறிய ஒரு வெண்குள்ளரின் உயர் திணிவு எவ்வளவாக இருக்கமுடியும் என்பதே அவரின் கேள்வியாக இருந்தது. ஒரு உயிர்ப்புள்ள நட்சத்திரத்தின் சமநிலைக்கு, ஈர்ப்பு விசைக்கு எதிராக நட்சத்திரத்தினால் பிறப்பிக்கப்படும் வெப்பத்தின் காரணமான வெளித்தள்ளு விசை செயற்படும் என முன்னர் பார்த்தோம். Cold Star ஆகிய வெண்குள்ளர்களில் வெப்பம் பிறப்பிக்கப்படுவதில்லை. இந்த நட்சத்திரங்கள் மிகவும் சிறியனவாகையினால் இதன் துணிக்கைகள் (Pauli) பௌலியின் வெளித்தள்ளுகைத் தத்துவப்படி வெவ்வேறு வேகங்களில் வெளித்தள்ளுகின்றன. இவ் வெளித்தள்ளுகை விசையானது ஈர்ப்பு விசையை சமன் செய்யும் போது வெண்குள்ளர்கள் சமநிலையை எய்தும்.

வெண்குள்ளர்களின் திணிவு கூடும்போது ஈர்ப்பு விசை அதிகரிக்கும். இதனால் வெண்குள்ளர் மேலும் சின்னதாகச் சுருங்கும். அப்பொழுது அதன் துணிக்கைகளின், அதாவது இலத்திரன்களின் வேகம் அதிகரிக்கும். இதனால் பௌலியின் வெளித்தள்ளுகை விசை அதிகரிக்கும். இதனால் வெண்குள்ளர் எனும் White Dwarf சமநிலை எய்தும். இதன்படி வெண்குள்ளர் ஒன்றின் திணிவு அதிகரிக்க, அதன் துணிக்கைகளின் வேகம் அதிகரித்து அதனைச் சமநிலையில் பேணுகின்றது. ஆனால் எந்தவொரு துணிக்கையின் வேகமும் ஒளியின் வேகத்தை மிஞ்ச முடியாது. எனவே வெண்குள்ளர்களின் துணிக்கைகளும் ஒளியின் வேகத்தை மிஞ்சமுடியாது. இதனால் வெண்குள்ளர் களின் திணிவு அதிகரித்துக் கொண்டு போகுகையில் ஈர்ப்புவிசையை எதிர் கொள்ளப் போதுமான வெளித்தள்ளுகை விசையை வெண்குள்ளர்களினால் பிறப்பிக்க முடியாது. ஏனென்னில் போதுமான வேகத்தை துணிக்கைகள் அடைய முடியாது போய் விடும். இந்நிலையில் வெண்குள்ளர் ஆனது உயர்ந்த ஈர்ப்புவிசையின் காரணமாக மேலும் மேலும் சுருங்கி ஒடுங்கி கனவளவு இல்லாத ஏதோ ஒன்றாக மாறிவிடுகின்றது. அதாவது ஒரு குறிப்பிட்ட திணிவின் மேல் வெண்குள்ளர் ஒன்று இருக்கமுடியாது என்றாகிறது. பல சிக்கலான கணித முடிவுகளுடன் தமது கடற்பிரயாணத்தின் போது சந்திரசேகர் இந்த எல்லைப் பெறுமானத்தை கணித்து ஒரு முடிவினைப் பெற்றார். அதன்படி நமது சூரியனின் திணிவின் 1.4 மடங்கு திணிவின் மேல் திணிவுடைய வெண்குள்ளர் நட்சத்திரம் ஒன்று இருக்க முடியாது. இவ் எல்லையின் மேல் திணிவுள்ள எநதவொரு இறந்த நட்சத்திரமும் வெண்குள்ளர் ஆகாது சுருங்கிச் சுருங்கி கனவளவு பூச்சியமாகும். இதன்படி அவ்விடத்தில் முடிவிலி அடர்த்தியும் பூச்சியக்கனவளவும் உள்ள வினோதமான Singularity என விஞ்ஞானிகள் அழைக்கும் ஒரு தனிமம் ஆகும். இத் திணிவின் எல்லையே "சந்திர சேகர் எல்லை" எனக் கூறுவார்கள்.

சந்திரசேகரின் இந்த முடிவானது அக்காலத்தில் இருந்த விஞ்ஞானிகள், வானவியலாளர்கள் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது. கணித முடிவுகளின் அடிப்படையில் சந்திரசேகரின் நிறுவலை ஒருவராலும் மறுக்க முடியவில்லை. அத்துடன் அயன்ரைனின் சார்புக் கொள்கைகளைக் கூட இம் முடிவு மீறவில்லை. இதனால் சந்திரசேகரின் முடிவை ஏற்றுக்கொண்ட பொழுதிலும், யதார்த்தமாக அவர்களினால் இதனை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. நட்சத்திரம் ஒன்று சுருங்கிச் சுருங்கி இறுதியில் அதன் திணிவு இருக்க கனவளவு மட்டும் பூச்சியமாகி மறைந்து விடும் என்பதனை அவர்களால் அப்பொழுது ஏற்றுக்கொள்ள முடியவில்லை. என்ன! எங்களாலும் கூடி ஏற்றுக் கொள்ள முடியுமா?

பலத்த சர்ச்சையை ஏற்படுத்தி இக்கணித முடிவை தன்னால் ஜீரணிக்க முடியவில்லை என்றார் பிரபல விஞ்ஞானி அயன்ரைன். முடிவில் நட்சத்திரங்கள் பற்றிய ஆய்வை நிறுத்தும்படி எடிங்ரனால் சந்திரசேகருக்குப் பணிக்கப்பட்டது. Galaxy Motion எனும் புதிய துறையில் ஆய்வுகளைச் செய்யும்படி சந்திரசேகருக்கு அறிவுரை கொடுக்கப்பட்டது. ஏறக்குறைய இவரது காலப்பகுதியிலேயே ரஷ்ய வானவியலாளர் Landan என்பவரும் இதே முடிவைக் கூறினார். பின்னர் 1983 இல் சந்திரசேகருக்கு இவ் வாராச்சிக்கும் சேர்த்து நோபல் பரிசு வழங்கப் பெற்றது.


**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12

Professional Photographer - கதிர்

416 - 750 - 8118

2381 Eglinton Ave., E., Kennedy / Eglinton, Scarborough



INSURANCE

**காப்புறுதி**

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

RBC Insurance

**உங்கள் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு நம்பிக்கையான நிறுவனம்**

நீங்கள் உங்களை ஆயுட் காப்புறுதி செய்வதன் மூலம் உங்கள் அன்புக்குரியவர்கள் எதிர்காலத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவும் தங்கள் உறுதியான வாழ்வைத் தொடரவும் நீங்கள் உதவி செய்கிறீர்கள். ஆயுள் காப்புறுதிகளில் பல வகைகள் உள்ளன. அவை பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

**தவணைக் காப்புறுதி TERM INSURANCE**

**நிரந்தர ஆயுட் காப்புறுதி PERMANENT INSURANCE & GUARANTEED PAID UP OPTION WITH CASH VALUE**

இந்தத் திட்டத்தின்படி உங்கள் ஆயுட்காலம்வரை திட்டம் நீடிக்கும். கட்டுப்பணம் எக்காலத்திலும் அதிகரிக்காது. இத் திட்டத்தில் நீங்கள் விரும்பியபடி 10, 15 அல்லது 20 வருடங்களில் உங்கள் காப்புறுதிக்கான முழுக் கட்டுப்பணத்தையும் செலுத்தி முடிக்கலாம். அதற்கான உத்தரவாதம் உங்கள் காப்புறுதிப் பத்திரத்தில் எழுத்தில் வழங்கப்படும்.

**வீட்டு அடமானக் காப்புறுதி MORTGAGE INSURANCE**

வங்கியின்மூலம் கொடுக்கப்படும் ஈட்டுக் கடனுக்கான காப்புறுதித் திட்டத்திலும் பார்க்க, எங்கள் இலகுவான அடமானக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் உங்கள் விருப்பத்திற்கேற்ப உங்கள் வீட்டு அடமானக் காப்புறுதியை தெரிவு செய்வதால் உள்ள சில நன்மைகள்

* உங்கள் பலன் பெறுபவராக (Beneficiary) உங்களுக்கு விரும்பியவரை நீங்கள் தெரிவு செய்யலாம். (வங்கியின் பெயரைத் தெரிவு செய்ய வேண்டியதில்லை)

* அடமானக் கடனுக்காக வங்கியை மாற்ற நேரிட்டால் காப்புறுதித் திட்டத்தை மாற்றவேண்டிய அவசியமில்லை.

* காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டுப்பணம் எந்தக் கட்டத்திலும் அதிகரிக்காது

* உங்கள் அடமானக் காப்புறுதியை ஆயுள் காப்புறுதியாகவும் மாற்றலாம்.

**வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி**
**NON MEDICAL INSURANCE**

40 வயது தொடக்கம் 80 வயது வரையிலானவர்களுக்கு வைத்திய பரிசோதனையின்றி காப்புறுதி செய்யப்படும். பணக் கொடுப்பனவு உறுதி செய்யப்படும். நீரழிவு நோயாளர்களும் இதில் அடங்குவார்கள்.

**சிறுவர் கல்வி சேமிப்புத் திட்டம் R.E.S.P**

உங்கள் குழந்தைகளின் எதிர்கால உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டத்தில் அரசாங்கம் வழங்கும் 20 வீத மானயத்துடன் எமது நிறுவனம் வழங்கும் 15 வீத போனஸ் ஆகியவற்றைப் பெற்று நன்மையடையுங்கள்.

**நோய் வருமுன் காக்கும் காப்புறுதி**
**CRITICAL ILLNESS INSURANCE**



**SRITHARAN THURAIRAJAH**
(Associate Life Underwriter)

**Cell: 416 918 9771**
**Tel: 416 297 6932**

OUR GUARANTEES ARE WRITTEN IN YOUR POLICY

# விளையாட்டுத் தகவல்கள் - 129



### மீண்டும் மீண்டும் வெற்றி

அமெரிக்காவின் கலி ஃபோர்னியாவில் நடை-பெற்ற அகியூரா கிளாஸிக் மகளிர் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் சக நாட்டவரான கிம் கிளி ஸ்டர்ஸை 3-6,6-2,6-



3 என்ற கணக்கில் ஞாயிற்றுக்கிழமை வென்று கைப்பற்றிய கோப்பையுடன் பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின். பிரெஞ்ச் ஓபன் இறுதி ஆட்டம் உள்பட கடைசியாக இருவரும் விளையாடிய 4 ஆட்டங்களில் ஹெனின் 3இல் வென்றுள்ளார்.

### தொடரை வென்றது அவுஸ்திரேலியா கிரிக்கெட்

டார்வினில் புதன்கிழமை நடைபெற்ற வங்கதேசத்துடனான 3வது ஒருதின கிரிக் கெட் ஆட்டத்தில் 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வென்றது.

இவ் வெற்றியை அடுத்து ஒரு தினத் தொ-டரை அவுஸ்திரேலியா 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

டாஸில் வென்ற அவுஸ்திரேலியக் காப்டன் ரிக்கி பாண்டிங் துடுப்பாட்டத்தைத் தேர்ந்தெடுத்தார்.

முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 254 ஓட்டங்கள் எடுத்தது. வங்கதேசம் 47.3 ஓவர் களில் 142 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

பாண்டிங் அபார சதம்: ஒரு கட்டத்தில் ஒரு விக்கெட் இழப்புக்கு 112 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த அவுஸ்திரேலியா அடுத்தடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும், பாண்டிங், பெவன் இணைந்து 5வது விக்கெட்டுக்கு 127 ஓட்டங்கள் சேர்த்தனர். பாண்டிங் 118 பந்துகளில் 4 சிக்சர்கள், 2 பவுண்டரிகளுடன் 101 ஓட்டங்கள், பெவன் 57 பந்துகளில் 2 சிக்சர்கள், 2 பவுண்டரிகளுடன் 57 ஓட்டங்கள் குவித்தனர். ஒரு தின ஆட்டங் களில் பாண்டிங்கின் 14வது சதம் இது.

வங்கதேசத் தரப்பில் சுழற் பந்துவீச்சாளர் ரஃபீக் 10 ஓவர்களில் 31 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 2 விக்கெட்டுகளை சாய்த்தார்.

வங்கதேசம் தொடர்ந்து விளையாடியபோது, 36 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்தது. அலோக் கபாலி 65 பந்துகளில் 49 ஓட்டங்கள் எடுத்து அணி மதிப்புமிக்க ஸ்கோரை எட்ட உதவினார்.

**எஸ். கணேஷ்**


அவுஸ்திரேலியத் தரப்பில் இயன் ஹார்வி 16 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

சுருக்கமான ஸ்கோர்.:
ஆஸ்திரேலியா: 50 ஓவர்களில் 254-7 (பாண்டிங் 101, பெவன் 57, ரஃபீக் 2-31, மோர்டாசா 2-41)

வங்கதேசம்: 47.3 ஓவர்களில் அனைத்து விக். இழப்புக்கு 142 (அலோக் கபாலி 49, இயன் ஹார்வி 4-16, ஹாக் 2-32).

### ரொனால்டோவுக்கு கௌரவம் - உதைபந்தாட்டம்

பிரேசில் கால்பந்து வீரர் ரொனால்டோவுக்கு கௌரவக்குடியுரிமையை திங்கட்கிழமை



அளிக்கிறார் சீனாவின் யுன்னான். மாகாணத் தனைநகரான குன்மிங் நகர மேயர் ஜான் ஜென்குவோ. சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ரியல் மாட்ரிட் அணியின் அனைத்து வீரர்களுக்கும் குன்மிங் நகரின் கௌரவக் குடியுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

### "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"

7ஆம் பக்கத்தொடர்ச்சி


இதன் சாரம் வருமாறு,
"உங்களது குழந்தையின் முதல் மொழி ஆங்கிலமாக இல்லாதிருந்தால், அக் குழந்தைக்கு முதல் மொழியில் பெறும் பலமான மொழி ஆற்றல் அக்குழந்தை ஆங்கிலத்தை இலகுவாகக் கற்பதற்கு பேருதவியாக இருக்கும்".

இதன் பொருள் ஏதோ பிள்ளையுடன் தமிழில் கதைத்தால் அல்லது தமிழ் சினிமாக் குப்பையை பார்த்தால் ஏதோ பெற்றுவிடும் என்பதல்ல என்பதையும் மனங் கொள்ள வேண்டும். குழந்தைக்கு தமிழில் வாசித்துக் காட்ட அல்லது வாசிக்க உதவ வேண்டும். தமிழ் எழுத்துக்களை அறிமுகப்படுத்தி அவற்றை எழுத வாசிக்க பழக்க வேண்டும். இவ்வாறு பலவகையிலும் அதன் தாய்மொழி அறிவு பெற உதவவேண்டும்.

ஆனால் என்ன பரிதாபமென்றால் தமிழில் ஒரு நல்ல சிறுவர் கதைப்புத்தகமும் விற்பனைக்கோ அல்லது வாசிப்பதற்கோ கிடைக்காது. முன்னர் சோவியத் ஒன்றியம் வாழ்ந்து கொண்டிருந்த போது கொழும்பில் சோவியத் புத்தக நிலையத்திலும், யாழ்ப்பாணத்தில் பூபால சிங்கம் கடையில் மிக அருமையான சிறுவர் / பாலர் சிறுகதைப் புத்தகங்கள் கிடைத்தன. சோவியத்யூனியன் சிதை வோடும், யாழ்ப்பாண இடப்பெயர்வோடும் அனேகமான புத்தகங்கள் மறைந்து விட்டன. இத் தேவையை பூர்த்தி செய்ய வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு எம் முன் காத்து நிற்கின்றது.

Education Ministry Documents Available at
416-362-5211 / 613-238-3630
Email:- info@micromedia.on.ca
Toronto Book Store
880 Bay street, Toronto- ont., M1A 1N8


NTE AUTO
New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 12வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



SIVABALAN
416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்


151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH



# அல்லல் தீர்க்கும் நல்லைக் கந்தன்

1ஆம் பக்கத் தொடர்ச்சி



சாமிநாதன் சிவனே அவன் ஆடலால் மதலையாயினன் என்பதால் அறியலாம். அவன் குமரன். அத்துடன் குறிஞ்சி நிலக்கிழவன் - தலைவன். மாறுபட்ட தன்மைகளின் சேர்க்கையாக மயூரன் விளங்குகின்றான். அவன் மன்றாடி மைந்தன், மால்மருகன், ஒருகைமுகன் தம்பி, குறவள்ளிக் காந்தன், தெய்வயானை மகிழ் மணவாளன். கந்தன், கடம்பன், கார்த்தி கேயன், மயூரன், கோழிக் கொடியோன், தேவ சேனாதிபதி. கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவதற்கு வசதியாக குன்று தோறும் அமர்ந்து என்றும் நன்று செய்யும் மன்றுளாடுபவன் மகன். அடியார் உளக் குகையுள் அமரும் குகன்.

இலங்கையின் ஆறுபடைவீடுகளில் ஒன்றாக ஒளிர்வது நல்லையம்பதி. அரசாட்சியின் தலைநகராக விளங்கியது அன்று. அருளாட்சியின் அணிநகராக விளங்குகின்றது இன்று. அது ஒரு தெய்வீகப் பூமி. அழகன் முருகனது ஆலயத்தினால் அதன் புகழ் அவனியெங்கும் பரவியுள்ளது.

ஆடி அமாவாசைக்கு ஆறாம் நாள் ஆரம்பமாகும் நல்லைக் கந்தனின் ஆண்டு மகோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்கள் நடை பெறும். கொடியேற்றத் திருவிழா, மஞ்சத் திருவிழா, மாம்பழத்திருவிழா, வேட்டைத் திருவிழா, கைலாசவாகனத்திருவிழா, சப்பைரதத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா என்பன முக்கிய திருவிழாக் களாகும். திருவிழாக்காலங்களில் நல்லை நகர் இந்திரலோகம் போல் காட்சியளிக்கும். திருவிழாகாலத்தில் அடியவர்கள் கூடி முருகன் புகழ்பாடி, ஆடி மகிழ்ந்து பிறவிப் பிணிக்கு அவன் அருள் நாடி நிற்கும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும். நல்லை மண்ணில் கால்பட்டாலே தெய்வீக உணர்வு ஏற்படும்.

**நா. க. சிவராமலிங்கம்**

தவசிரேட்டர்கள் இருந்த இடம் தேரடி ஆகும். அங்கு கந்தனின் அருள் மணக்கும், எழில் மணக்கும், அடியவரின் பகதி மணக்கும், ஆச்சாரியர்களின் வேதபாராயண ஒலி மணக்கும், புராண விரிவுரைகள் மணக்கும். அத்துடன் இளவட்டங்களின் இன்ப விளை யாட்டுகளுக்கும் குறைவில்லை. இதனை கந்தப்பெருமானின் கவர்ச்சி மிக்க திருவிழா என்று கூறுவதிலும் பார்க்க, யாழ்ப்பாண மக்களின் சமுதாய விழா என்று கூறுவதே மிகப்பொருத்தமுடையது. விழாக்கள் சமு தாயத்தைப் பிரதி பலிப்பவையாகும். கூடும் கூட்டம் ஆடும் மயில்மீதமரும் முருகனின் அருளைத் தேடும்பணியில் ஈடுபட்டாலும் எமது தாய்நாடு போற்றும் சமயவிழாவின் பீடதனைப் பறைசாற்றுகின்றதெனலாம்.

நல்லூர் மூலஸ்தானத்தில் வேல் ஒளிர் கின்றது. அது ஞானவேல். அது எமது அஞ்ஞானத்தை அகற்றி மெஞ்ஞானத்தை அருளவல்லது. அந்த வேலை வேண்டித் தொழுதால் ஆண்டியான முருகனின் அருளைப் பெற்று எமது துன்பங்களைத் தாண்டி பாண்டித்தியம் பெறலாம். நல்லூ ரான் திருவடிகளை நாளும் மனத்தில் நிறுத்தினால் அல்லல் நீங்கும் ஆனந்தம் பெருகும்.

நல்லைப்பதியுறை திருமுருகா
நம்புமடியவர்க் கருள் முருகா
வல்ல வேல் தாங்கிய பெருவீரா
வந்தனை புரிபவர்க் கருள் வடிவேலா
அல்லல் தீர்க்கும் அயில் வேலா
அடியவர்க் கருந்துணையாகிடும்
கிரிவாசா
கல்லையொத்த மனமுருக்கும் நின்
கருணைகெல்லை இல்லையப்பா.


## A-1 Truck & Forklift Training School



- * AIR BRAKES
- * LOW RATES CONTRACT AVAILABLE
- * DEFENSIVE DRIVING
- *ONE ON ONE TRAINING
- * INSTANT ROAD TEST BOOKING

Contact:
KULDIP
GREWAL

**905-405-9990**

**7454 AIRPORT Rd. Mississauga, Ont.**



# New Kalyani Catering & Take out

NOW

292 Markham Road, Scarborough, Ontario

**416-261-9774**



நியூ கல்யாணி தனது 9 ஆவது வருடத்தை முன்னிட்டு வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை May 15th, 2003 தொடக்கம்...

**வாரத்தில் ஏழு நாட்களும்**

**Lunch Special**

Madras chicken Buriyani $3.99
Jaffna Buriyani $4.99

**Dinner Special**

Megoring Noodles Chicken $3.99
*(Malasiyan Style)*

**சனிமுதல் - ஞாயிறு வரை**

**Lunch Special**

*முத்துச்சம்பா 10 பதார்த்தங்களுடன் வாழையிலையில்*


**Dinner Special**

*கொத்து ரொட்டி(கோழி, ஆடு, மாடு)*

வாரத்தில் ஏழு நாட்களும்

**இடியப்பம் 6¢**

500க்கு மேல் கொள்வனவு செய்தால் 5¢
ரொட்டி (பறோட்டா) 50¢
100க்கு மேல் கொள்வனவு செய்தால் 40¢



**ஒவ்வொரு திங்கள் முதல் - புதன் வரை Lunch Special**

Vegitable Thali $2.99

***Dinner Special***

Singapore Noodles $2.99

**ஒவ்வொரு வியாழன் முதல் - வெள்ளி வரை**

**Lunch Special**

விரதச் சாப்பாடு 10 பதார்த்தங்களும் வழங்கப்படும் $3.99

***Dinner Special***

மசாலா தோசை $2.49
Plan தோசை $1.99
5 இட்லி $1.99
(சாம்பார், சட்னி இலவசம்)

சனி, ஞாயிறு- தீவக மக்களின் முறைப்படி விஷேசமாக தயாரிக்கப்படும் கூழ் $3.99

எந்த நேரத்திலும் எவ்வளவு ஆனாலும் ஓடராக செய்து பெற்றுக் கொள்ளலாம். மற்றும் (Ceylon Bakery பாண் வகைகள், Cake வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து சிற்றுண்டி வகைகளும் மலிவு விலையில் செய்து தரப்படும். எந்த விதமான கொண்டாட்டங்களானாலும் மலிவு விலைகளில் Catering செய்து தரப்படும்.

# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



இன்றுவரை, நீ, "ஆம், நான் ஆத்மார்த்தமாக தார்மீகமாக வாழ்கின்றேன். நான் நேர்மை, நாணயம், அன்பு யாவும் நிறைந்தவள். என் ஆன்மீகம் எனக்கு உதவி வழிகாட்டுகின்றது என எண்ணியிருக்கலாம்.

ஆனால் இன்று உனது தற்போதைய அனுபவங்கள், எதிர் காலத் திட்டங்கள் யாவற்றையும் பரிசீலித்து, நீ வெற்றியுடன் முன்னேறிட உதவக்கூடிய செயல் திட்டத்தைத் தீர்மானித்திக்கொள். எவ்வித மான வாழ்க்கைப் பாதையில் முன்னேறிட நீ விரும்புகின்றாய் என்பதை நீயே புரிந்து கொள்ளாவிட்டால் உன் ஆன்மாவாகிய உள்ளுணர்வு எப்படி உனக்கு எப்படி வழிகாட்டும்.

## லலிதா புருடி

உனது வாழ்வு முன்னேறிட ஒரு திட்டம் அவசியம், அத்தியவசியம். எனது அக வாழ்வுதான் என் புறவாழ்வை வழி நடத்தும். ஆகவே இன்று எனது அக வாழ்வைப் பரிசீலித்து திருத்தி அமைக்க ஆரம்பிக் கின்றேன். இதை என்னால் மட்டும் தான் செய்யமுடியும் என்பதை நான் உணர் கின்றேன்.

அன்பானவர்களே! வாழ்க்கையை முழுமை யாக்குவது என்ன தெரியுமா? உங்கள் நம்பிக்கையும் அநுபவமும் தான். உங்கள் ஒவ்வொருவரின் வாழ்வைப் பூரணமாக் கின்றன என்பதை இன்று தெரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் ஒருவர் முழுமை யாக ஜீவிக்க, அநுபவமும், நம்பிக்கையும் அத்தியாவசியம். உனக்குக் கிடைக்கும் என்று நீ எதிர்பார்க்கும் சகலதும், வாழ்வில் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உனக்குக் கட்டாயம் இருக்க வேண்டும். வாழ்க்கையில் ஏற்படும் எந்தப் பெரிய சவாலையும் என்னால் வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை உனக்கு இருக்க வேண்டும். உனது நம்பிக்கையே கடைசியில் நல்ல அநுபவங்களுக்கு உன்னை அழைத்துச் செல்லும் எனும் அசையாத விசுவாசம் உனக்கு இருக்க வேண்டும் உன்நம்பிக்கை வீண்போகவில்லை என்பதை உன் அநுபவங்கள் அறிவுறுத்தும்போது இதன் உண்மை உனக்கு விளங்கும். இது உண்மை தான் என்பதை நீயே உணர்ந்து புரிந்து கொண்ட பின், உனது நம்பிக்கை விசுவாசம் மேன்மேலும் ஓங்கி வளரும். ஒரு அநுபவத்தின் சுவை மேலும் சிறந்த அனுபவங்களை, வித்தியாச வித்தியாசமான அநுபவங்களை அடையவிரும்பி உன்னை ஊக்குவிக்க, நீ மேன்மேலும் திறமையாகச் செயற்பட ஆரம்பிப்பாய். நம்பிக்கைக்கும் அநுபவத்திற்குமுள்ள வித்தியாசம் என்ன தெரியுமா? முதலாவ தாகிய நம்பிக்கை வளர, நீ பாடுபட்டு உழைக்க வேண்டும். இரண்டாவதாகிய அநுபவம், தானாகவே தனது உழைப்பு முத்திரையை உன்மேல் பதித்துச் செல் கின்றது.

உனது நம்பிக்கை உயிரோடிருக்க நீ உழைக்க வேண்டும். உனது நம்பிக்கை சரி வராது போலச் சிலவேளை தோன்றலாம். ஆனால் விடாமுயற்சியுடன் தொடர்ந்தும், "இது சரிவரும்" என்று ஒரு அறிகுறி, ஒருசிறு அநுபவம் வரும்வரை, விடாது செயற்படும் போது, கடைசியில், "ஓ! இது சரி தான்", என்பது உனக்குத் தெரிய வருகின்றது. அநுபவம் வாழ்வில் முத்திரை பதித்துச் செல்கின்றது. உன் சிந்தனையையும், பேச்சையையும், செயலையும் அநுபவம் வழி நடத்துகின்றது. சில சமயங் களில் அநுபவம் உனது இதயத்தை விசாலமாக்கி, புதிய உலகிற்கு உன்னை அழைத்துச் செல்லலாம் அல்லது பயத்தினால் உன் இதயத்தை இறுக்க மூடி உன்னை உறையவும் பண்ணலாம். ஒரு நிகழ்வின் அநுபவத்தின் மத்தியில், கடைசியில் நான் வெற்றி தரும் நன்மை அடையப் போகின்றேன் என்று நீ கொண்டிருக்கும் நம்பிக்கை, நிச்சயம் நிஜமாகப் போகின்றது என்பதை நீ உணர்ந்து கொள்வாய். உன் உள்ளுணர்வு அதை உனக்கு உணர்த்தும்.



எந்த அநுபவத்தின்மேல் நம்பிக்கை வைப்பது நல்லது என்பதை நீ உணர்ந்து செயற்படுவது மிகமிக முக்கியம். ஒரு அநுபவம் உனக்குத் துன்பத்தைத் தந்தாலும், அது நற் பயனளிக்கக் கூடிய ஏதோ ஒரு புதிய பாடத்தை உனக்குக் கற்பிக்கின்றது என விசுவாசத்துடன் நம்பு. உனக்கு இன்பமளிக்கும் அநுபவங்கள், அவற்றைப் போல இருமடங்கு பயன்தரக் கூடிய அநுபவங்களையடைய வழி வகுக்கின்றன. உனது இதயம், மனம், உணர்வுகள், நீ ஏற்கெனவே அநுபவித்ததை விட, சிறந்த வாழ்க்கைக்கும், வெற்றி களுக்கும் வழிகாட்டு கின்றன என்ற திறந்த மனப்பான்மையுடன் நம்பிக்கை கொண்டு முன்னேறு. நீ கவனித்திருக்காவிட்டாலும், எப்போதும் உனது நம்பிக்கையும் அனுபவங்களும் கைகோர்த்த நண்பர்களாகத் தான் செயற்படு வதை இதுவரை நீ உணராது இருந்திருக்கலாம். இன்றுமுதல், இன்னும் சிறந்த, மகோன்னத அநுபவங்களை உருவாக்கிட என்னால் நிச்சயம் முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்படு. உனக்கு ஆழ்ந்த விசுவாசத்தையும், உயர்ந்த நம்பிக்கையையுமூட்ட உனது அநுபவங் களை உபயோகித்துக் கொள்.

